செய்தாலும், தொடர்ந்து அந்தத் துப்புரவுப் பணிகள் நிறைவு பெறவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் சில நேரங்களில் அங்கே சென்று பார்த்தால் நிச்சயமாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். 200 குடியிருப்பு இருக்கிற இடத்தில் ஏறத் தாழ 1,200 பேர் இருக்கிறார்கள். மேற்படி கோட்டத்தில் மொத்தம் 41 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். 6 பேர்கள், அதாவது 12 விழுக்காடு பணியாளர்களை இச்சிறிய பகுதியில் அனுப்பியிருக்கிறோம். அவர்கள் காலையிலும், மாலை யிலும் அப்பகுதியில் தொடர்ந்து துப்புரவு பணியினை மேற் கொண்டு வருகிறார்கள். தவிர, இப்போது நானும் திடீர் திடீர் என்று குடிசைப் பகுதிகளுக்குச் சென்று அப்பகுதிகளிலுள்ள சுகாதார நிலைமைப் பற்றி பார்வையிட்டு வருகிறேன். மாண்பு மிகு உறுப்பினர் சொல்லியுள்ள இந்த இடத்திற்கும் சென்று பார்வையிட முயற்சி செய்கிறேன்.

10–55 மணி.

திரு. ம. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளை திடீரென்று மாற்ற முடியாது. அதில் பிரச்சினை இருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இது மாணவர்கள் நலன் கருதி செய்யப்படவேண்டிய ஒன்று. அக்குடிசைகளுக்குப் பதிலாக அதற்கு இணையாக பல மாடி கட்டிடம் கட்டி அங்கே அவர்களை மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் அங்கே சுகாதார நிலையை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் இதில் அதிக கவனம் செலுத்தி அதிகமான துப்புரவுப் பணியாளர்களையும் உடனே அங்கே அனுப்பி துப்புரவுப் பணியை மேற்கொள்ள ஆணையிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிடுகிற பகுதிகளில் மட்டு மல்லாமல், எங்கெங்குள்ள குடிசைப் பகுதிகளில் இப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறதோ எங்கெங்கு நெருக்கடி இருக்கிறதோ அங்கெல்லாம் துப்புரவுப் பணி தீவிரமாக முடுக்கி விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ)பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்து முதல் முப்பத்தேழு வரையி லான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.